Title	KAMIKA-AGAMAM – Part III
Language	SANSKRIT
Script	GRANTHA, TAMIL
Courtesy	THE HIMALAYAN ACADEMY
Publication	THE SOUTH INDIAN ARCHAKAR ASSOCIATION
Source	

அர்க்ய ஜலம்.

ஜலம் பால் தர்ப்பைநுனி யவை (கோதுமையின் ஓர் வகை) வெண்கடுகு அரிசி எள் நெல் இவைகளோடு கூடிய அர்க்யம் அஷ்டாங்கமாகச் சொல்லப்படுகிறது.

தண்ணீர் பால் தர்ப்பைநுனி அரிசி புஷ்பம் எள்ளு யவை வெண்கடுகு இவைகளோடு கூடிய அர்க்யம் அஷ்டாங்கமாகுமென்றுஞ் சொல்லப்படுகிறது.

அவ்வாறன்றி அரிசி நெல் வெண்கடுகு எள்ளு சேர்ந்த நீராவது அல்லது புஷ்பஜலத்தோடு கூடினதாவது அர்க்யமாகச் சொல்லப்பட்டது.

சந்தனக் கலவை.

சந்தனம் அகில் குங்குமப்பூ இவைகள் த்ரிகந்த மென்று சொல்லப்படுகிறது. கற்பூரஞ்சேர்த்து சதுஷ்கந்த மென்றுஞ் சொல்லப்படும். குங்குமப்பூ பரிமளத்தோடு கூடிய பச்சைக்கற்பூரம் சந்தனம் இவைகளோடாவது, தனித்தனியாக ஒரு விராகனிடை அல்லது பாதி அல்லது அதிற்பாதியாவது சந்தனத்திற் கலக்கவேண்டும்.

உத்தமோத்தம லிங்கத்திற்கு ஒரு பல முதலாக பலனைக் கொடுக்கத் தக்கது. உண்மையாகவே மிகவும் சக்தியில்லாதவர்கட்குக் கிடைத்தவரையில் இவ்வாறு பாத்யமுதலான வஸ்துக்களின் பிரமாணம் சொல்லப்பட்டது.

ஓ முனிச்ரேஷ்டர்களே! புஷ்பங்களி னிலக்கணத்தைச் சுருக்கமாகச் சொல்லப்போகின்றேன்.

புஷ்பவிதி.

வெள்ளைப் புஷ்பங்கள்.

வெண்டாமரை, புன்னை, சங்குபுஷ்பம், மல்லிகை, நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், மந்தாரம், பஹுகர்ணிகை, த்விகர்ணி, அழவணம், லக்ஷ்மீபுஷ்பம் (வில்வப்பூ), ஜாதிமல்லி (பிச்சி), மகிழம்பூ, வெள்ளெருக்கு, முல்லை, தும்பை, காசாம்பூ, வெள்ளலோத்தி, விஷகை, ஈயபுஷ்பம் (இண்டம்பூ), பத்திராக்ஷி, கிறுகத்திரிப்பூ, கண்டங்கத்திரி, சண்பகபுஷ்பம், அலரி, அசோகம், ஆலிகை சுதபுஷ்பம், ஊமத்தை, நாணற்புஷ்பம் ஆக முப்பது. இந்த வெள்ளைப் புஷ்பங்கள் முக்யமெனவும் கௌணமெனவும் இருவகையாகும்.

சிவப்புப் புஷ்பங்கள்.

செந்தாமரை, முருக்கு, செங்கழுநீர், பாதிரி, மௌசலி, ஊமத்தை, சிவப்பு கண்டங்கத்திரி, அலரி, வியாக்ரி, சிவப்புமந்தாரை, பட்டிப்பூ, வைஜிகை, முனிபுஷ்பம் மற்றும் பிரசித்தமான ரக்த புஷ்பம் ஆக பதினன்கு. செந்நிற புஷ்பங்களின் பலனை விரும்புவோர் கூறிப்போந்ததைப் பூஜிக்க வேண்டும்.

மஞ்சட் புஷ்பங்கள்.

பெருவாகை, கோங்கு புஷ்பம், சண்பகம், பொன்னூமத்தை, கொன்றை, கோதண்டம், காட்டுவாழை, கிரிமல்லிகை ஆக எட்டும் மஞ்சட் புஷ்பங்களிற் சிறந்தவை.

கருநிற புஷ்பம்.

கறுப்பு நிற புஷ்பத்தில் நீலோற்பலம் (கருநெய்தற் புஷ்பம்) சிறந்தது.

பத்திரங்கள்.

வில்வபத்திரம், சடாமாஞ்சி, மஹாபத்ரை, ஆத்தி, நாயுருவி இவை ஐந்தும் பஞ்ச வில்வங்க ளெனப்படும். தர்ப்பை, அறுகு, வன்னிபத்திரமும் அவ்வாறு கொள்ளப்படும்.

துளசி, சந்த்ரபம், தாந்தம், நாவற்பத்திரம், நாகமல்லி, ஓரிதழ்த்தாமரை, விஷ்ணுக்ராந்தி, மிகவும் பரிமளமுள்ள காட்டுமாம்பத்திரம், கருந்துளசி, சிவகரந்தை இவை முதலான பத்திரங்கள் புத்திரவிர்த்தியைச் செய்கின்றவை. வெட்டிவேர், குருவேர் முதலான வர்க்கங்கள் சுபத்தைத் தருகின்றவை.

பத்திர புஷ்பங்கள் வொன்றினென்று விசேஷம்.

ஆயிரம் எருக்கம் புஷ்பத்தைப்பார்க்கிலும் கொக்குமந்தாரைப் புஷ்பம் சிறந்தது. ஆயிரம் கொக்கு மந்தாரைப் புஷ்பத்தைப் பார்க்கிலும் பொன்னூமத்தை சிறந்தது. ஆயிரம் பொன்னூமத்தம் பூவைப் பார்க்கிலும் வன்னிபுஷ்பம் சிறப்பாகிறது. சமஸ்தமான புஷ்பவகைகளுள் பிரகாசம் பொருந்திய கருநெய்தல் சிறந்தது.

பாடாந்தரம். (பாடபேதம்)

ஆயிரம் எருக்கம் புஷ்பத்தைப் பார்க்கிலும் ஒரு அலரிப் புஷ்பம் சிறந்தது. இவ்வாறு முறையே அலரிப்பூ, தாமரைப்பூ, வில்வபத்திரம், கொக்கு மந்தாரை, பொன்னூமத்தை, கண்டங்கத்திரிப்பூ, தும்பைப்பூ, நாயுருவி, நாணற்பூ, வன்னிப்பூ, கருநெய்தல் இவையொன்றினொன்று ஆயிரம் பங்கு சிறந்தது.

தாமரைப்பூ, கொக்குமந்தாரை, வில்வபத்திரம், கருநெய்தல் இவை யொன்றினொன்று ஆயிரம் பங்கு சிறந்தது என்பதும் ஆகும்.

சம புஷ்பம்

சாதிமல்லி, விஜய பாதரி இவை அலரி புஷ்பத்தோடு சமம். வெள்ளை மந்தாரைப் புஷ்பம் தாமரைப் புஷ்பம் இவை இரண்டும் தம்மிற் சமம். புன்னை சண்பகம் சுரப்புன்னை இவை பொன்னூமத்தைக்குச் சமம்.

நீக்கவேண்டியவை.

தாழம்பூ. குறுக்கத்தி, காட்டுமுல்லை, இருவாக்ஷி, காட்டுவாழை, வேங்கை, உச்சித்திலகம் இவைகளின் புஷ்பங்களை வர்ஜிக்க வேண்டும். அழிஞ்சிற் பத்திரமும் புஷ்பமும், அரசம் பத்திரமும் நீக்க வேண்டும். பயங்கரமான இலைகளையும் புஷ்பங்களையும் நீக்க வேண்டும். வாசனையில்லாதவையும் துர்வாசனை யுள்ள துமாகிய புஷ்பங்களையும் வர்ஜித்தல் வேண்டும்.

வாசனையுள்ளதா யிருந்தாலும் பரிசுத்தமில்லாத புஷ்பங்களை நீக்கல் வேண்டும். வாசனையில்லாவிடினும் பரிசுத்தமாகிய நாணல் முதலான புஷ்பங்கள் கொள்ளத்தக்கவையாகும்.

சமய புஷ்பம்.

சிவபெருமானிடத்தில் பொன்மயமான கடப்பம் புஷ்பங்கள் இரவில் சமர்ப்பிக்கத் தக்கவை. வர்ஜிக்கப்படாத ஸமஸ்தமான புஷ்பங்களும் பகலில் சமர்ப்பிக்கத்தக்கவை. இரவிலும் பகலிலும் மல்லிகை சமர்ப்பிக்கத்தக்கது. அர்த்த ஜாமத்தில் ஜாதிபுஷ்பம் சமர்ப்பிக்கத் தக்கது. அலரி இரவிலும் பகலிலும் சமர்ப்பிக்கத் தக்கது.

கேசம் புழு இவைகளா லடிப்பட்டது; சிதறிப் போனது; பழமையாகியது இவற்றையும், தாமாக வுதிர்ந்த புஷ்பங்களையும் அடிபட்ட புஷ்பங்களையும் வர்ஜித்தல் வேண்டும்.

மொக்குகளால் தேவனை அர்ச்சிக்கக் கூடாது. வேகாத பண்டங்களை நிவேதனம் செய்யலாகாது.

இந்த அர்ச்சனை விஷயத்தில் கூறிப்போந்த புஷ்பங்கள் கிடைக்காவிடின் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். பத்திரங்கள் கிடைக்காவிடின் பழங்களைச் சமர்ப்பிக்கலாம், பழங்கள் கிடைக்காவிடின் புல் புதர் மூலிகையாவது சமர்ப்பித்தல் வேண்டும், மூலிகைகள் கிடைக்காவிடில் பக்தியினுல் பூஜிக்கத் தக்கவராக ஆகின்றூர்.

பத்திற்கொன்று சிறப்பு.

மேற்கூறிய புஷ்பங்களுள் ஒவ்வொரு புஷ்பத்திற்கும் பத்து கொண்டது ஸ்வர்ணபுஷ்பத்தின் பலன். ஸ்வர்ணத்தைப் பார்க்கி

லும் மாணிக்க முதலான. ஒன்பது விதமாக வுற்பவித்த ரத்தினமானது பத்து பங்கு அதிக பலனுள்ளது.

மேற்கூறிய புஷ்பங்களை மாலையாகத் தொடுத்து ஸமர்ப்பித்தால் இரட்டித்த பலனைத் தரும்.

பூஜைக்கு புக்தாயுக்த புஷ்பங்கள்

தனது தோட்டத்தி லுற்பத்தியான புஷ்பம் அல்லது வனத்திலுற்பத்தியான புஷ்பங்களாலாவது பூஜித்தல் வேண்டும். அவ்வாறன்றி விலைக்கு வாங்கிய புஷ்பமுதலானவைகளால் பூஜித்தலாகாது.

தூபம்.

கறுப்பு அகில் ஒரு பங்கு, சாம்பிராணி இரண்டு பங்கு, கொஞ்சம் கற்பூரத்தோடு சேர்க்கப்பட்டதான சந்தனம் மூன்று பங்கு தேனிற் கலந்ததான இந்த தூபம் ப்ரசித்தமான சீதாரியெனப்படும்.

கந்ததிரவ்யம், சந்தனம், பாயஸம் (தேவதாரிப்பிசின்) இவைகளோடு துஷ்டிக மென்னும் பிசின், சமஹிதம் என்னும் இவையெல்லாம் முறையே ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து பங்காக விருத்தி செய்யப்பட்டுத் தேனினுல் நனைக்கப்பட்ட தூபம் மற்றுமோர் வித சீதாரிதூப மெனப்படும். அவ்வாறன்றி துருஷ்கம் என்னும் பிசின், கற்பூரம், பரமுஸ்தை அல்லது சங்கு, அகரு, சந்தனம். முரமென்கிற கந்த த்ரவ்யம், சடாமாஞ்சி; சிதா என்னும் கந்தத்ரவ்யம் இவைகளைச் சேர்த்துத் தேனுல் நனைக்கப்பட்ட தூபத்தைக் கொடுத்தல் வேண்டும்.

வெட்டிவேர் சந்தனத்தோடு கொஞ்சம் தேனுல் நனைக்கப்பட்டதும், பரமசிவத்திற்குப் பிரியமாகிய வெட்டிவேர் முதலான தூபமும் மத்தியமமாகச் சொல்லப்பட்டது. நெய்யோடு கூடின குங்கிலியம் அதமமான தூபமாகச் சொல்லப்படுகிறது. தூபத்திற்காகச் சாமான்யமாய்க் காரகிலாவது, மஹிஷாக்ஷி குங்கிலியமாவது ஆகும்.

தீபம்.

தீபங்கள் ஒன்று முதல் பத்து வரையில் மிகவும் தாழ்ந்தவை. நூறுமுதல் ஆயிரம் முடிவாகவும், பதினாயிரம் லக்ஷ பரியந்த முள்ளதாகவும், பத்து லக்ஷம் கோடி சங்கியை யுள்ளதாகவும், பதினாயிரம் முதல் அற்புத முடிவாகவும் ஆகும்.

ஒற்றைப்படை தீபசங்கியை ஆகும். இராத்திரியில் இரட்டிப்பாக ஆகும். அணையாமலிருக்கிற தீபங்களாக இருக்கவேண்டும். இவ்வாறு தீப சங்கியை சொல்லப்பட்டதிற் பாதியாகவும், அதிற்பாதியாகவும் இருக்கவேண்டும்.

காராம்பசுவின் நெய்யினால் சாத்வீகமான தீபம் சொல்லப்படுகிறது. நல்லெண்ணெயோடும் வெள்ளாட்டு நெய்யோடுங் கூடினது ராஜஸ தீபமாகச் சொல்லப்படுகிறது. எருமை நெய்யோடு கூடின தீபம் தாமஸ தீபமாக ஆகும்.

ஒன்று இரண்டு மூன்று அங்குலம் ஜ்வாலைகள் அதம, மத்திம, உத்தமமாகவும் ஸ்மரிக்கப்பட்டன.

விருக்ஷத்தின் விதைகளி லுற்பத்தியான எண்ணெய்களோடு கூடின தீபம் பைசாசமெனச் சொல்லப்படுகிறது. தாமச தீபத்தைப் பார்க்கிலும் பைசாசமாகிய தீபம் அயோக்கியமாக நினைக்கப்படுகிறது.

நைவேத்ய முதலியன

அவிசின் விதியால் சித்தமான நைவேத்யம் அனேகப் பிரகாரமாகும். பூஜை முடிவில் ஹோமம் பூதபலி நித்யோச்சவம் செய்யவேண்டும்.

பரம்சிவத்தின் ஒவ்வொரு தாண்டவந் தோறும் நிருத்தனம் பாட்டு முதலான லக்ஷணங்களால் தியானித்தல் வேண்டும். அதன் பேதங்கள் தற்காலம் நிச்சயிக்கப்படுகிறது.

பலன்

சிரத்தையோடு கூடிய திரேகத்தைப் பற்றி மூவுலகத்திலும் இவ்வாருகிய அர்ச்சநாங்கங்களால் விதிப்படியே சிவபூஜை செய்கின்றுனே அவன், ப்ரபுத்துவத்தாலே பிரகாசிப்பிக்கப்பட்ட திக்குகளையுடையவனும், தேவதா ச்ரேஷ்டர்களாற் புகழப்பட்டவனும், சிவஞான சிவாநந்தங்களை இயற்கையாக வுடையவனும், ஆணவமாதி மலபந்தங்களால் விடப்பட்டவனும், நிர்யாண காலத்தில் சாத்திரப்படி ஸமஸ்த வுலகங்களின் உற்பத்தி சம்ஸாரங்களுக்குக் காரணமான சிவபுரத்தை அடைவான்.

ஐந்தாவது அர்ச்சநாங்கவிதி படல சந்த்ரிகை முற்றிற்று.

—:*:—

‖ 𑌅𑌥 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌃 ‖

𑌅𑌥𑌾𑌤𑌸𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥

𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥ ௫

நீவாரவ்ரீஹி ஶால்யன்னம் ராஜஷஷ்டிகஷாஷ்டிகா: ।
ததைவ மத்யமா வ்ரீஹிஸம்ஸ்க்ருதா ச கந்யஸா ॥

ஏதேஷாம் தண்டுலா: ப்ரோக்தா நைவேத்யாய ப்ரயோஜிதா: ।
யாவந்தஸ்தண்டுலாஸ்தத்ர நைவேத்யே பரிகல்பிதே ॥

தாவத்வர்ஷஸஹஸ்ராணி ஶிவலோகே மஹீயதே ।
வித்யாஸ்ய ஸம்யக்கிரணே வ்ரீஹ்யாத்யைஸ்ஸாயுஜ்யமாப்னுயாத் ॥

ஸம்ப்ரோக்ஷ்ய ஶுத்தகே வ்ரீஹீன் ஸிக்தேவ ஶுஷ்கதண்டுலா: ।
ஶாலாஸ்யம் ஹ்ருதயே நைவேத்யம் ஸம்ஸ்க்ருத்ய ஸாதக: ॥ ௧௫

க்ரியா ச கண்டனம் கார்யம் தண்டுலா நவயார்த்தவா ।
ஆதபே ஶோஷணே ஹ்ருத்வஸ்த்ரை: ஶாலிஶோதிதயேத் ॥

ஶோதிதானி ஸ்வர்ணகே ஶுத்தா தண்டுலகம் ப்ரக்ஷாளயேத் ।
த்ரிஶோதை: ஸ்னானம் ப்ராத்ய வ்ரீஹிபி: ஶோதிதம் யஜேத் ॥

ஶக்திமாத்ரா த்ரிதி ஜலம் ஶாஸ்த்ரேணைவ கல்பயேத் ।
ஶாகஸூபம் ப்ருதக்பாக்யம் ப்ரஸூதி: கல்பயேத் ததா ॥

ததா ஸம்ஸ்க்ருதஜலை: ப்ரஸ்தை: பாத்ரம் ஶுத்தகலஶேன ச ।
த்ரோணம் வாரிசதுஷ்கம் ப்ரோக்தம் ஶாஸ்த்ரேணைவம் ப்ரகீர்த்திதம் ॥

த்ரிகாலஜம் ஶோஷகம் வித்யாத்யதாநம் ஶோஷிதம் ததி: ।
யாவணார்த்தேஷு பூர்ணேஷு பூர்வம் ஶோஷ்ய நிவேதயேத் ॥ ௨௦

தத்ததர்பணீதம் ப்ரஸ்தம் ஸமேதஸ்வாத்மாதி பூர்வகம் ।
ஹாரம் வாரித்ரயம் ப்ரோக்தம் ஶாஸ்த்ரேணைவம் ப்ரகீர்த்திதம் ॥

நித்யே நைமித்திகம் கார்யம் நைவேத்யம் த்ரிவிதம் ஸமம் ।
அஷ்டாஷ்டமம் ச தத் வர்த்திகம் வேத்ரம் த்ரோணமிதி ஸ்ம்ருதம் ॥

ஶிவாக்னிப்ரோணஞ்ச நித்யே தத் நவமா ஹவி: ।
தண்டுலைர்மாஷகா ஸ்ரீநைந நைவேத்யம் ப்ரகல்பயேத் ॥

வாராப்ரஸ்தத்வயம் ப்ரோக்தம் ஹவிர்மாஷக ஶோத்யதே ।
ப்ரஸ்தம் காஞ்சனஸம்யுக்தம் நைவேத்யம் ஶாஸ்த்ரதோ தேத ॥

ஸகலா நாஸ்தி நைவேத்யம் ஸமேதம் ப்ரஸ்தத்வயாதிகம் ।
சதுஷ்கத்வயமாஹ்ருதம் தத்ப்ரஸ்தா நவ ஸம்ப்ரியா ॥ ௨௫

நைமித்திகஹவிர்தானம் ஶ்ரேஷ்டம் த்ரிவிதமேவ ச ।
யாவத்ப்ராயஶ்சித்தமாநம் தாவத்காலம் ஹவிர்பவேத் ॥

ஸாஜ்யம் ப்ரதிதினம் ஶாஸ்த்ர மக்ஷ்யமாஸார்தவஸாநிகா ।
ப்ரோக்ஷ்ய ப்ராயஶ்சித்தம் ஶுத்தயே ஸார்த்தம் விதீயதே ॥

ஸாமான்யதாரதாஸ்த்ராதிவாஸ்த்ரம் ஶாஸ்த்ரமாஹிதம் ।
நவப்ரஸ்தமானகம் வார்த்தவி ப்ரதிஸஸ்யம் ப்ரகல்பயேத் ॥

ப்ரோக்ஷ்ய தவிதினா பூர்வம் ஸ்நானாதௌ பரிவாரகா: ।
ஶாஸ்த்ரவஸ்த்ரயா ஶ்ரேஷ்ட ஶாஸ்த்ரஜ்ஞாபவீதின: ॥

பவித்ரபாணய: கார்யம் ஶ்ருத்வா பாகம் யதா ததா ।
வஸ்த்ரபூர்வேஷு சோரேஷு ஜலத்ரோணம்
ப்ரபூரயேத் ॥ ௩௦

பாத்ரம் ஶாஸ்த்ரஜ்ஞ: க்ருத்வா க்ஷாலயேத் தண்டுலான் ஹ்ருதா ।
ஜலே சைவ தத்ர ஷட்குர்யாத் நிக்ஷிப்ய ச ஸமாஹிதா: ॥

ஷட்குண: க்ஷாலனம் க்ருத்வா ஸக்ருத் நப்ரக்ஷிபேஜ்ஜலே ।
ஜ்ஞாத்வா தத்ர யந்த்ரம் ஸப்தகம் கல்பயேஜ்ஜலமேவ ச ॥

ஸார்த்தம் ப்ரத்யேகம் ப்ராக்ஷ்ய ப்ரஸிந்துகணே தம் பாசயேத் ।
ப்ரஜ்வலிதே ஹோமாதேர்ஹோமாக்னிதேஜஸா ததா ஹோமயேத் ॥

பக்வாபக்வ ஸாஜாம் ச ஶுத்தம் தண்டுலநாவயேத் ஸ்ருதா ।
உத்த்ருத்ய பாத்ரேவேந ஶாலாத்ருதயேந தத் ॥

விந்யஸ்யார்த்தம் ஶிவோபேண கல்பேணாத்ரம் ப்ரதீபயேத் ।
விபீடிகாதிஸம்ஜாதேஷ்டே: கோடீகீர்த்திஸம்யுதை: ॥ ௩௫

விஸ்ரம்பிஷ்யாஸதேஸ்யாவிகாஶைஷ்டை நந்தீபயேத் ।
யஶோதயா ஶக்திஶ்ச ஶக்திவகலா ஶீதலம் ॥

गोधूमपिष्टविकारांश्च पृथग्द्व्यर्पितं तथा ।
सनागरं च माषाणां पायसं क्षीरसंयुते ॥

तण्डुलस्य प्रमाणं तु क्षीरं द्विगुणं स्यात्तण्डुलार्धकम् ।
गुडं चेत्तदर्धं वा शेषं तैस्तैः
प्रपूरयेत् ॥

पाचितं पायसं प्रोक्तं मुद्गानां मधुनान्विते ।
पायसं पूर्ववत्कृत्वा मुद्गचूर्णं गुडं क्षिपेत् ॥

मुद्गान्नं पृथक्कृत्वाज्यं तस्यार्धं वा तदर्धकम् ।
कदलीफलसंयुक्तं मुद्गान्नं इति कीर्तितम् ॥ ४०

तण्डुलार्धं तिलं ज्ञेयं कृसरान्नं प्रशस्यते ।
गुडस्यार्धं तदर्धं वा मुद्गाना मधुनान्विते ॥

तण्डुलार्धं तदर्धं वा मुद्गं मुद्गान्न मुद्यते ।
सह तथा मधु सघृतं यथामात्र मधु वा ॥

मरिचजीरयुक्तं जीरकं सर्षपं तथा ।
शुण्ठीचूर्णं विनिक्षिप्य द्विमरीच्यां पुरीकीर्तितम् ॥

हविषां लक्षणं प्रोक्तं पृथक्त्वं मोदकानपि ।
मुद्गमाषकलायाश्च शिम्बा निष्पावमेव च ॥

राजमाषाढकी चैव निष्पावं सतिलं तु वा ।
कूष्माण्डनालिकेराम्रकदलीफलं बहुभिर्युतम् ॥ ४५

द्राक्षां कर्कटीं चैव सतिलं विशोषं तथा ।
कदली कारवी पत्री कुष्ठं मञ्जरीकं तथा ॥

वर्तिमुद्गस्तु शुक्लं च नालिकेर्या संयुतम् ।
सह कैश्चित् मध्यनां पृष्ठसंस्कृतं पचेत् ॥

पक्वान्नानि पवित्राणि सर्वदोषविवर्जिते ।
पृष्ठं पचेत संयुक्तं नालिकेरफलादिभिः ॥

मरीचजीरकाद्यैश्च संस्कृत्य तत्प्रशस्यते ।
लवणाज्ययुतानि स्युः षाडवानि तानि हि ॥

शुण्ठीसंस्कारयुक्तानि मरीचादियुतानि च ।
हिङ्गुत्वक्सर्षपं लवणं पृथक्पृथक् समीरितम् ॥ ५०

त्रिकटुकं समान्नेन मरीचैः परिकीर्तितः ।
सविशेषा प्रमाणं मानं मरीचाद्यैः प्रशस्यते ॥

कुलत्थमुद्गनिष्पाव तदर्धं वा तत्तदर्धकम् ।
मुद्गनिष्पावं प्रोक्तं मधिकं मानमेव वा ॥

कषायसंस्कारयुक्तानि मरीचादियुतानि च ।
सिद्धार्थकषायुक्तानि रसवन्ति च पाचयेत् ॥

तान्यपूर्वपक्वदण्डमुद्गस्य संस्कृतानि च कारयेत् ।
कारवेल्लफलादीनां मरीचं पेषितं कृतम् ॥

निक्षिप्य दधिना चूर्णं पाचयेत्तु घृतवह्निना ।
गव्येन सहसंयोज्य रसवन्ति शुभानि च ॥ ५५

सतत्पाचयेत्पदं कल्पयेत् विधं तथा ।
विविधानि चपानि भोज्यभक्ष्यैः कृतानि च ॥

संयुक्तमुद्गयुक्तं मधुरीपादिसंयुतम् ।
नैवेद्यं मधुपायसं सम्भवति ॥

पृथिवीं हस्तमात्रं च पञ्चवर्णैरलङ्कृते ।
तथाभिचार मार्गेण विधिना परिकल्पयेत् ॥

शीताभिचारमुद्गस्य पक्वनैवेद्यं तु वा ।
पात्राणि सौवर्णे ताम्रे वाथ मृण्मये परिकल्पयेत् ॥

त्रिपात्रं पक्वानि विन्यस्य भाजनस्थापितानि च ।
संयुक्तं मुद्गयुक्तं मधुरीपादि संयुतम् ॥ ६०

ஶிரோவாஹ்யககக்ஷ்யாஸ்வந்தே ஸமந்தாத் ஸாதக: க்ஷிபேத் ।
பாத்ராண்யப்யத்ர ஸர்வாணி விந்யஸேத்து ஸமந்தத: ॥
பாநீயம் ப்ரத்யேகமேவ ஸ்தாநாத் ஸங்க்ராஹயேத் க்ரமாத் ।
காரணாத்யாய ஸம்வித்ய லக்ஷணே லக்ஷிதேஷு ச ॥
ஸ்தாலிகாதிஷு வா பாத்ர கதலீபத்ரகாதிஷு ।
ந்யஸ்தேஷு பாத்ரேஷ்வந்நாத்யம் தர்வ்யா லக்ஷணயுக்தயா ॥
ந்யஸேத் ஸம்பூர்ணபாத்ராணி மந்த்ரம் த்ர்யக்ஷரம் ஜபேத் ।
உபதம்ஶாநி ஸர்வாணி நைவேத்யாபி விந்யஸேத் ॥
ப்ருதக்பாத்ரகதம் பஞ்சகவ்யாதி ததா ।
பாண்டபூர்ணம் ஹவிர்ஜ்ஞாபி தத்யாதிக மந்த்ரிதம் ॥ ௬௫
ஶிவாக்ரே மண்டலே பக்தே வஸ்த்ராதி விந்யஸேத் ।
த்ரிபாத்யமபி விந்யஸ்ய ஸ்தாலிகாதிகதம் ஹவி: ॥
பேயம் லேஹ்யஞ்ச சோஷ்யஞ்ச பக்ஷ்யாண்யபி ச விந்யஸேத் ॥
ஸம்ப்ரோக்ஷ்ய ஹ்ருதயேநைவ ஶோதயித்வா ததோ ஹ்ருதா ।
அம்ருதீக்ருத்ய தேந்வாஸ்த்ரா நைவேத்யம் கல்பயேத் ॥
நிவேத்ய தக்ஷிணே ஹஸ்தே தத்யாத் பாநீயமுத்தமம் ।
கந்தவ்ருத்யாதிஸம்யுக்தம் தேவாநாம் ச ப்ருதக் ப்ருதக் ॥
க்ருத்வா ஹவிஸ்து பாகார்த்தம் பூர்வாம்ஶம் து ஶிவாய ச ।
ததர்த்தம் சண்டிகாயார்த்தம் த்யக்தாத்தம் பலிகர்மணே ॥
யதம்ஶம் பாத்ரஸம்ஶ்லிஷ்டம் பாசகாய ப்ரதாபயேத் ।
சண்டிகாயாவஶிஷ்டஞ்ச பலிஶிஷ்டஞ்ச யத்தவி: ॥ ௭௦
தத்ஸர்வம் பாசகாயைவ ப்ரோக்தம் த்ரயோதஶாநநா ।
நைவேத்யம் து ப்ரதாதவ்யம் மந்த்ரேண தத்ஸம்ஹிதே ॥
பாஹ்யாவரணதேவாநாம் நைவேத்யம் ஸ்யாத்
ப்ருதக் ப்ருதக் ।
தத்ரைவ பலிதாநம் ஸ்யாத் தாரயுக்ஷவஸாரதம் ॥

தத்பாஹ்யே பூர்வவீத்யாம் ச திக்விதிக்ஷ்வாவ்ருதேஷு ச ।
ருத்ரேப்ய: பூர்வதோ தத்யாந்மாத்ருப்யோ தக்ஷிணே
ததா ॥
கணேப்ய: பஶ்சிமே பாகே யக்ஷேப்யோऽப்யுத்தரே பலி: ।
க்ரஹேப்யஶ்ச ததைஶாந்யாமஸுரேப்யோऽக்நிகோசரே ॥
வாருண்யாம் பக்ஷேப்யோ நாகேப்யோ வாயுகோசரே ।
நக்ஷத்ரராஶிவர்கேப்யஸ்ததா விஷ்ணவே ச ॥ ௭௫
ஹோராணாம் பலிதாநம் ஸ்யாத் தத்ரைவ [1]மந்தஸ்தலே ।
[2]வாயோர்வாருணயோர்மத்யே க்ஷேத்ரபாலபலிம் க்ஷிபேத் ॥
ஸதேவேஷு ச வீதீஷு பூதாநாம் பலிர்த்விஜா: ।
ப்ரதமம் த்வாரபாலாநாம் பூதாநாம் ஸ்யாத் த்விதீயகம் ॥
வ்ருஷாதிபலிபீடம் ச தத்ர தாவரணக்ரமாத் ।
அஷ்டௌ த்ரிஷட்த்ரிரஷ்டௌ ஹி த்ரிம்ஶச்ச பரிவாரகா: ॥
இந்த்ராதீநாம் ஸ்வாயுதாநாம் ததேஷாம் ப்ருதக் ப்ருதக் ।
கணேஶ சந்த்ர ஸூர்யாணாம் பாவகாநாம் விஶேஷத: ॥
ஸம்ஹிதே ஸதி ஸர்வேஷாம் மாத்ருகாணாம் ஹவிஸ்து ।
தத: பூர்வோத்திதே பீடே பலித்ரவ்யாதிஶேஷத: ॥ ௮௦
யக்ஷராக்ஷஸவேதாள பூதப்ரமதகிங்கரா: ।
வித்யாதரவநாகாஶ்ச ப்ரஹ்மதைத்யாஸ்ததா ॥
பூர்ணாதி சதுர்ஷு ஸ்தாநாதிஷு ச ।
ஸ்வாஹாந்தம் பலிநிர்மாணம் ஸர்வேஷ்வபி இதி யோஜயேத் ॥
பலிதாநஸமாப்தம் தத்ராத் பூதபலிஸ்தத: ।
ஸர்வதிக் பாரஸாபே த்ரிஶத்யம்ஶாநகாம்ஶகே ॥

பா - 1 க்ஷேத்ராதிபே ।
2 வாயுவாருணதிக்பாகே ।

[illegible] நைவேத்யம் [illegible] ஸ்வசக்தித: ।
ததா [illegible] ॥

நிர்மால்யஞ்ச [illegible] நிவேதயேத் ।
யேந நிர்மால்யகம் யாதி நிர்மால்யம் இதி கீர்த்யதே ॥ ௮௫

[illegible] நிர்மால்யஞ்ச விஸர்ஜயேத் ।
[illegible] நிவேதயேத் ॥

[illegible] நிர்மால்யஞ்ச ந போஜயேத் ।
[illegible] ॥

இதி காமிகாக்யே மஹாதந்த்ரே நைவேத்யவிதிர்
நாம ஷஷ்ட: படல:

ச்லோகம் - ௮௰½ ஆக ச்லோகம் - ௧௧௮௫½

—o—

உ

சிவமயம்

6-வது நைவேத்யவிதிபடல சந்த்ரிகை.

நைவேத்ய விபரம்.

அவ் வர்ச்சநாங்கத்தின் பிறகு அர்ச்சநாங்க க்ரமத்தை யறிந்தத னுற் சிறப்பாகிய நைவேத்யத்தின் விதியைச் சொல்லப் போகின்றேன்.

பக்தியினுலும், திரவியத்தின் அனுசரணையினுலும் நைவேத்யத்தைச் செய்யவேண்டும். ஷாட்குண்ய பரிபூர்ணரான சதாசிவப் பெருமானை நோக்கிப் பத்திரமாகிலும் புஷ்பமாகிலும் பழமாகிலும் ஜலமாகிலும் அன்னபாநீய முதலான சாகவர்க்கமாகிலும் நிவேதனம் செய்யாமற் புசிக்கக் கூடாது.

நைவேத்ய புலன்.

அப்பமுதலான யாதொரு பதார்த்தம் புசிக்கத்தக்கதோ அதைச் சிவபெருமானுக்கு நிவேதித்தவனுக்கு தான்யம் விருத்தியடைகிறது. பரமசிவத்திற்கு அன்னத்தைக் கொடாவிடில் அந்தப் பொருள் குறைகிறது. அற்பமாகிலும் பெரிதாகிலும், பணக்காரன் தரித்திரனிவர்களுக்குப் பயன் சமமாகும்.

சக்திக்குத் தக்கபடி பூஜைசெய்தல் வேண்டும். இவ் விஷயத்தில் பக்தியே காரணம். பண்டிதன் சிவத்திற்கு நைவேத்யத்தைக் கொடுத்து மங்களமான கார்யத்தைச் செய்விக்க வேண்டும். நிவேதனஞ் செய்யாமல் யாதொரு சுபகார்யம் செய்யப்படுகிறதோ அந்தக் கார்யம் அமங்களத்தின் பொருட்டாகிறது.

சுவாமியினுடைய சுபகார்யகாலங்களிற் செய்யப்பட்ட மனிதனுடைய சுபகார்யம் கெட்டுப்போகும். ஆகையால் ப்ரம்மோச்சவத்திலும் த்வஜாரோகணத்திலும் ஸ்தாபன முதலானவற்றிலும் க்ஷௌரம் (இது மந்திரபூர்வமான க்ஷௌரம்) விவாக முதலான மங்கள கார்யங்களை விடல் வேண்டும்.

நைவேத்ய தான்யம்.

செந்நெல் முதலான தானியங்களுடைய அமுதானது உத்தமம். யவை மத்திமம். மற்றத் தானியங்களின் அமுது அதமமாகும். யாதொரு தானியங்கள் வெண்மையான அரிசியை யுடையனவோ அவை செந்நெல் முதலான ஸமஸ்தமான உயர்ந்த தான்யங்களென ஸ்மரிக்கப்பட்டன. மற்றவையெல்லாம் சாமான்ய தான்யமெனச் சொல்லப்பட்டன. அவைகட்குப் பயன் வெவ்வேருக இருக்கிறது.

பொன்சம்பா பெரியசம்பா முத்துச்சம்பா வெண்சம்பா செஞ்சம்பா மிகவும் பரிமளச்சம்பா இவைகள் உத்தமமாக எண்ணப்படுகிறது. மூங்கிலரிசியும் அவ்வாறே மற்ற தான்யங்களும் மாதுரீ குஸூம்பேர மென்னும் தான்யங்களும் விதைக்காமல் தனித்து முளைத்த நெல் அல்லது தினை இவைகளும் மத்திமமெனச் சொல்லப்பட்டன.

சாதாரணமான பூனைக்காலி நெல்லும் சிறிது கறுத்த தான்யமும் அறுபது நாளையில் விளைகிற தான்யங்களும் அவ்வாறே பன்றி நெல் சிறுமணி இவைகளும் அதமமாகும்.

இவைகளின் அமுது சிவப்ரபுவுக்கு நைவேத்யத்திற்காகச் சிறந்ததாகச் சம்மதிக்கப்பட்டது. அந்த நைவேத்யம் செய்வதில் எவ்வளவு அரிசிகளோ அவ்வளவாயிர வருஷம் சிவலோகத்திற் பூஜிக்கப்படுகிறுன்.

தான்ய சுத்தி.

பரிசுத்தமான பூமியில் தான்யம் முதலியவற்றைச் சூரிய கிரணங்களால் உலர்த்தி, அஸ்த்திர மந்திரத்தால் புரோக்ஷித்து உரலில் நெற்களைப் போடவேண்டும். அநுஷ்டாதாவானவன் இருதய மந்திரத்தால் உலக்கையைப் பிடித்து மூன்று முறையாவது ஐந்து முறையாவது அல்லது ஒன்பது முறையாவது அந் நெற்களைக் குற்றல் வேண்டும். நான்காவது வர்ணத்திற் பிறந்த ஸ்திரீகளாலாவது புருஷர்களாலாவது குற்றிவைக்கவேண்டும். அவைகளுடைய உமி பொட்டு முதலானவை முறம் முதலான சாதனங்களால் நீக்க வேண்டும்.

இருநூற் றிருபத்தைந்து நெற்களினளவு சுக்தி யென்னப்படும். அந்த அளவு மூலமாகவே அளவு செய்யவேண்டும். முத்துச்சிப்பியினளவே சுக்தியினளவு. ஒரு உள்ளங்கை இரண்டரைச்சுவடு உழக்கு ஒத்தை சரங்காய் இரண்டு சரங்காய் நாழி பரஸ்தம். இவ்வாறு முகத்தலளவு இரண்டு ப்ரஸ்தம் ஒரு பாத்ரம் இரண்டு பாத்ரம் ஒரு ஆடகம். நான்கு ஆடகம் ஒரு த்ரோணம் இரண்டு த்ரோணம் ஒரு காரி மூன்று காரி ஒரு பாரம் என்று சொல்லப்பட்டது.

இரண்டு குண்டுமணி ஒரு மாஷம் – இருபது மாஷம் ஒரு தாரணம். எட்டு தாரணம் ஒரு பலம் அல்லது முஷ்டி நான்கு முஷ்டி ஒரு ப்ரஸ்தம் பின்மேல் சொன்னபடி இது நிருத்தலை முதலாகவுள்ள பரிமாணமாகும்.

நைவேத்ய விசேஷம்.

நித்யம் நைமித்யம் காம்யமென நைவேத்யம் மூவிதமாகும். எட்டு அங்கங்களுள் நான்கு மூன்று இரண்டு ஒன்று பதக்குகளால் நிரப்பப்படுகிறது.

நைவேத்ய ப்ரமாணம்.

நித்ய பூஜையில் அவிசானது ஒன்பது விதமாகும். சிவத்திற்கு அரிசி அளவானது குருணி. குருணியைப் பார்க்கிலும் குறைவாய் நைவேத்யத்தைச் செய்யக் கூடாது. வடிக்காத ஸ்தாலிபாகம் முதலான அவிசு இரண்டு நாழி சொல்லப்பட்டது. அவிசின் அளவு குருணியாகச் சொல்லப்படுகிறது. ஒன்றேகாற்படி பிசாசுவுணவாகச் சொல்லப்படுகிறது. சகள மூர்த்திகளுக்கு நைவேத்யம் இரண்டு நாழிக்கதிகமாக இருத்தல் வேண்டும். இரண்டு குருணிமுதல் அதன் விருத்தியானது ஒன்பது சங்கியையாகும்.

மூன்று விதங்களான லிங்கங்களில் நைமித்திக அவிசின் அளவு எவ்வளவோ அவ்வளவு காம்ய அவிசினளவாகும். பதினைந்து நாள் ஒருமாதம் வரை உபயோகிக்கும் பாத்திரமானது நாடோறும் பரிசுத்தமாக இருத்தல் வேண்டும்,

திரிவிதபாத்ரம்

உத்தம மத்திம அதமமென்னும் நியாயப்படி இப்பொழுது பாத்திரங்கள் விதிக்கப்படுகிறது. பொன் வெண்கலம் செம்பு முதலான சுத்தமான த்வனியை யுடைத்தான பாத்திரமாவது நூதனமான மண் பாண்டமாவது சந்திதோறும் உபயோகஞ் செய்தல் வேண்டும்.

நைவேத்ய பாகம்

முன்னமே சொல்லப்பட்ட விதியினுல் முதலில் பரிசாரகர்கள் ஸ்நானம் செய்து வெண்ணிற வஸ்திரங்கள் வெண்ணிறப் பூணூல்களைத் தரித்தவர்களாய்ப் பவித்ரங்களைக் கைகளி லணிந்து ஸ்வயம் பாகத்தைச் சாஸ்திர விதிப்படிச் செய்தல் வேண்டும்.

வஸ்திரத்தால் வடிகட்டின ஜலங்களால் தீர்த்த பாத்திரத்தை நிறைக்கவேண்டும். பிறகு பாத்திர சுத்தியைச் செய்து, அரிசியை இருதய மந்திரத்தாற் களையவேண்டும். ஜலத்தாலேயே ஆறுமுறை அடிக்கடி களைந்து, ஷடங்க மந்திரங்களால் அலம்பி, சத்யோஜாத மந்திரத்தால் ஜலத்திற் போடவேண்டும். பாத்திரத்தின் பாதிக்கு மேல் ஜலமிருக்கும்படிச்செய்து நடுபாத்திரத்தைத் தியானித்து அதன் கழுத்தில் தர்ப்பங்களைக் கட்டுதல்வேண்டும்.

கோமயம் முதலானதால் மெழுகி ப்ரோக்ஷிக்கப்பட்டிருக்கிற பாகசாலையில், தர்மா தர்மங்களைப் புசிக்கிற அடுப்பை அக்ஷதையினால் இருதய மந்திரத்தால் பூஜிக்கவேண்டும்.

வாமதேவ மந்திரத்தால் விறகை யெடுத்து இருதய மந்திரத்தால் அடுப்பில் வைக்க வேண்டும். அகோர மந்திரத்தால் அக்நியை வைத்து, அஸ்திர மந்திரத்தால் அக்நியை ஜ்வலிப்பிக்கவேண்டும்.

எறும்பு முதலியவற்றால் சூழப்பட்டது, சொத்தை புழுக்கள் இவைகளை யுடையது, நெருப்புப் பொறியை யுடையது முதலாகிய விறகுகளால் நெருப்பை ஜ்வலிப்பிக்கக் கூடாது.

புகை வாசனை யுடையது குழைந்தது அளிந்தது குளிர்ந்தது மயிர் புழுக்களையுடையது பழமையானதுமான அமுதை நீக்கவேண்டும். இவ்வாறு சுத்தான்னஞ் செய்ய விதி சொல்லப்பட்டது.

பாயசம்

இப்பொழுது பாயசமானது சொல்லப்படுகிறது. அரிசியைப் பார்க்கிலும் பால் இரட்டிப்பாயும், பயறு அரிசியிற் பாதியும் இருக்க வேண்டும். பால் கிடைக்காவிடின் அதிற்பாதியாவது பாலும் மிகுதி ஜலத்தாலும் நிறைத்தல் வேண்டும்.

பாகம் செய்யப்பட்டதாகிய பாயசமானது சொல்லப்பட்டது. இப்பொழுது சர்க்கரைப் பொங்கல் சொல்லப்படுகிறது.

சர்க்கரைப் பொங்கல்

பாயசம் முன்போற் செய்து நான்கு பங்கு வெல்லமும், அதிற் பாதி நெய்யும் சேர்க்க. அதிற்பாதியாவது பாதியிற்பாதியாவது வாழைப்பழம் சேர்க்க. இது சர்க்கரைப் பொங்கலென்னப்படும்.

எள்ளோரை

அரிசியிற்பாதி எள்ளு சேர்த்தல் எள்ளோரையிற் சிறந்தது. கிடைக்காவிடின் பாதி அல்லது பாதியிற் பாதியாவது சேர்க்க வேண்டும்.

பருப்புப் பொங்கல்

இனி பயறன்னம் சொல்லப்படும். அரிசியிற்பாதி அல்லது பாதியிற்பாதியாவது பயறு சேர்த்துப் பாகஞ் செய்தல் பயறன்னமெனச் சொல்லப்படுகிறது.

மஞ்சளன்னம்.

மேல்சொன்னவைகளும் கிடைத்த மட்டிலும் மிளகு சீரகம் மஞ்சள் கடுகு கலந்து பாகஞ்செய்யப்பட்டது மஞ்சளன்னமெனச் சொல்லப்படுகிறது. அவிசுகளுடைய இலக்கணமானது சொல்லப்பட்டது. வியஞ்சனங்களைச் சொல்லப்போகின்றேன்.

வியஞ்சனம்.

பயறு உளுந்து கொள்ளு காராமணி துவரை இவைகளைப் பொட்டில்லாமல் தூற்றித் தோலில்லாமலாவது தோலுடனாவது, பூசனிக்காய் பலாக்காய் சுரைக்காய் காலிங்கம் கண்டங்கத்தரி கத்தரிக்காய் கக்கரிக்காய் என்னுமிவைகளைத் தோலுடனாவது தோலில்லாமலாவது, வாழைக்காய் பெருங்காயம் கண்டங்கத்தரி மாங்காய் வெள்ளரிக்காய், அப்படியே கொடிவகைக் கிழங்குகளும் கிழங்கு வகைகளும் வேறுவித கிழங்குகளும் கொள்ளல் வேண்டும். அரிசி படி யொன்றிற்கு வியஞ்சனங்களாவ்வொன்று மொருபலம் இருத்தல் வேண்டும்.

புதியவைகளாயும் பரிசுத்தங்களாயும் ஸமஸ்த குற்றங்களினின்றும் விடப்பட்டு நெய்யோடு சேர்த்துப் பசனஞ் செய்யப்பட்டவைகளாயும், தேங்காய் முதலானவற்றோடு கூடினவைகளாயும், மிளகு சீரகம் முதலானவற்றால் பக்வஞ் செய்யப்பட்ட அந்த வியஞ்சனமானது சிறப்பாக இருக்கிறது. அந்த வியஞ்சனங்கள் உப்பு நெய் புளிப்பு மிளகு முதலிய சேர்மானங்களோடு கூடினதாயும் இருக்க வேண்டும்.

உப்பு முதலியவற்றின் பிரமாணம்.

மரக்காலொன்றுக்கு உப்பு இருபது பலம் சொல்லப்பட்டிருக்கிறது. படி யொன்றுக்கு மிளகு மூன்றிலொன்று அல்லது நான்கிலொன்று சேர்க்க. மிளகைப் பார்க்கிலும் நெய் இரட்டிப்பான அளவு சிறந்ததாக இருக்கிறது.

அமுதிற்குப் பயத்தம்பருப்பு பதினாறிலொன்று எட்டிலொன்று மூன்றிலொன்று சமம் அல்லது அதிகமாவது சேர்க்க வேண்டும்.

ருசியுள்ள பதார்த்தங்கள் சம்பாரம் மிளகு கடுகு பொடியோடும் பாகஞ் செய்ய வேண்டும். அவைகளிலே சில மாப்பண்டத் துண்டங்களாலும், கொள்ளுப் பொடி மிளகுப் பொடிகளாலும் முறையாகச் சேர்த்து செய்யப்பட வேண்டும்.

மோர்க்குழம்பு பச்சடி முதலியவை.

சுத்தமாகக் கடையப்பட்ட மோரை நெருப்பில் வைத்து சிறு தீயிற் பாகஞ் செய்யவேண்டும். வெல்லந்தோடு ருசியான பழங்களைச் சேர்த்தல் வேண்டும். இவ்வாறு பருப்பும் வேறு வஸ்துக்களும் பாகஞ் செய்யத்தக்க திரவியங்கள் சேர்ந்த நானாவித பலகாரங்களும் செய்தல் வேண்டும்.

நைவேத்யக் கிரியை.

சங்கவாத்யத்தோடு கூடினதாயும் குடை தீபம் முதலானவற்றோடு கூடினதாயும் வியஞ்சனம் முதலான மிகவும் சித்தமாகிய நைவேத்தியத்தை இறக்கி வைக்கவேண்டும். பரிசுத்தமாய் மெழுகப்பட்டு பஞ்சவர்ணப் பொடிகளாற் கோலமிட்டுள்ள பூமியில் உருக்கிய நெய்யினாற் பவித்திரங்களால் சுத்தி செய்தல் வேண்டும். நெய்யினாலேயே மூன்று ஆகுதியை அங்க மந்திரங்களாற் குளிர்ச்சியாகும்படி நனைத்தல் வேண்டும். ஜலந்தால் பாத்திரங்களைச் சுத்தி செய்து ஜலத்தால் திரிபுண்டரத்தைக் குழைத்துத் தரிக்க வேண்டும்.

பரிசுத்தமான வஸ்திரத்தால் மூடப்பட்ட நைவேத்ய பாத்திரங்களை முக்காலியின் பேரில் சங்கவாத்யத்துடனும் குடை விளக்கு முதலானவற்றுடனும் வைத்து வாசற்படியிலிருக்கிற ஜனங்களால் மறைப்பதற்காக, வழியில் ஜலத்தினால் புரோக்ஷித்தல் வேண்டும். சகல பாத்திரங்களையும் ஜலத்தையு மவ்வாறே கொணர்ந்து முன்மண்டபத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

கரணுத்யாயத்தால் நன்றாகச் சித்திக்கப்பட்ட லக்ஷணங்களாலே குறிக்கப்பட்ட ஸ்தல முதலானவைகளில் பரிசுத்தமான வாழையிலை முதலியவற்றை வைத்து அதன்மேல் வஸ்திரமிட்டு அதன்மேல் சாத்திர லக்ஷணத்துடன் வாய்ந்த கரண்டியுடன் பூர்ண சந்திரபிரகாசமுள்ள பாத்திரங்களை வைக்கவேண்டும். ஓம் (அகார உகார மகாரம்) என்னும் மூன்றக்கரத்தை ஜபிக்கவேண்டும் ஸமஸ்தமான வியஞ்ஜனங்களை நைவேத்யத்தின் மேல் வைக்க வேண்டும். புதிய பசுவின் நெய் கற்கண்டு உருசியுள்ள பழம் மாவடு (மாம்பிஞ்சு) குற்றமற்ற தயிர் முதலியவற்றைப் பரமசிவத்தின் முன்மண்டபத்தில் பரிசுத்தமான வெள்ளை வஸ்திர முதலானவற்றால் பரப்பப்பட்ட முக்காலியின் மேல், பாத்திர முதலியவற்றை யடைந்த அவிசை வைத்து பச்சடி துவையல் வற்றல்களை கிரமப்படி யமைத்தல் வேண்டும். இருதய மந்திரத்தாற் புரோக்ஷித்து அஸ்திர மந்திரத்தாற் சோதித்து தேனுமுத்திரையால் அமிருதீகரணஞ் செய்து நைவேத்யத்தில் புஷ்பம் வைத்து நிவேதித்து பின்பு வலது கையில், சிரேஷ்டமான தீர்த்தத்தை விடல் வேண்டும்

நைவேத்ய பாகம்.

உள்ளாவரணத்தி லிருக்கிற தேவர்கட்கு அவிசு வெவ்வேறாக விருக்கவேண்டும். அவிசை நான்கு பங்காகச் செய்து மேற்பாகத்தை சிவத்தின் பொருட்டும், அதன் கீழ்ப் பாகத்தை அக்நிகார்யத்திற்காகவும், அதன் கீழ்ப் பாகத்தை பலிகார்யத்திற்காகவும், பாத்திரத்தில் மிகுதியாயிருக்கிற நான்காவது அம்சத்தை அர்ச்சகரின் பொருட்டும் கொடுக்க வேண்டும். அக்நிகார்யத்தின் மிகுதியும் பலியின் மிகுதியுமாகிய அவிசெல்லாம் அர்ச்சகருக்கே என்று இந்த சாஸ்திரத்தில் இப்போது சொல்லப்படுகிறது. அவ்வாறு கிடைக்காவிடின் மனதினால் நைவேத்யம் கொடுக்க வேண்டும்.

பிராகார தேவதா நைவேத்யம்.

வெளியாவரணத்திலிருக்கிற தேவர்கட்கு நைவேத்யமானது வெவ்வேறாக இருக்க வேண்டும். கிடைக்காவிடின் அவைகட்கு வெளியிலிருக்கிற பீடங்களில் திக்கு விதிக்குகளில் ஸ்தாபிக்கப்பட்ட தேவதைகளில் த்வாரபாலகர் முன்பாகப் பலி கொடுத்தல் வேண்டும்.

கிழக்கே உருத்திரர்களின் பொருட்டும், அவ்வாறே தெற்கில் மாத்ருக்களின் பொருட்டும், மேற்கு திக்கில் கணங்களின் பொருட்டும், வடக்கு திக்கில் யக்ஷர்களின் பொருட்டும், ஈசான்ய திக்கில் கிரகங்களின் பொருட்டும், ஆக்நேய திக்கில் அசுரர்களின் பொருட்டும், தென்மேற்கில் ராக்ஷசர்களின் பொருட்டும், வடமேற்கில் சர்ப்பங்கள் இருபத்தேழு நக்ஷத்திரங்கள் பன்னிரண்டு ராசிகளின் பொருட்டும், வடகிழக்கில் விச்வதேவ கணத்தின் பொருட்டும் பலி கொடுத்தல் வேண்டும். அவ்விடத்திலேயே க்ஷேத்ர பாலகரின் பொருட்டு, வாயுதிக்கு மேற்கு திக்குகளின் பாகத்தில் க்ஷேத்ர பாலகர் பலியையும் கொடுத்தல் வேண்டும் இவ்வெட்டுப் பீடங்களிலும் திக்குப் பாலகர்களுக்காவது பலியைக் கொடுத்தல் வேண்டும்.

முதலில் த்வாரபாலகர்கட்கும் இரண்டாவது பூதங்கட்கும் இடபம் முதல் பலிபீடம் வரையில் ஆவரணக் கிரமமாயும் பலி கொடுக்கவேண்டும்,

எட்டு பன்னிரண்டு பதினாறு முப்பத்திரண்டு பரிசாரகர்கள், யாதொரு தேவர்கள் உள்ளாவரண முதலான ஆவரணத்தி லிருக்கிறார்களோ அத்தேவர்கட்கு தனித்தனியாய், நைவேத்யம் கொடுக்க வேண்டும். அவ்விடத்தில் விநாயகரை விசேஷ வுபசாரத்துடன் பூஜித்து; கூடுமானால் ஸமஸ்தர்கட்கும் அவ்வாறு உபசாரத்துடன் பூஜை செய்ய வேண்டும். பிறகு கிழக்கே யிருக்கிற பலி பீடத்தில் விசேஷமாக பலியைக் கொடுக்க வேண்டும்.

பலிமந்திரம்.

யக்ஷர் ராக்ஷதர் பைசாசர் பூதகணம் கந்தர்வர் கின்னரர் பித்ருக்கள் அசுரர் நாகர் இவர்களுக்கும், பிம்மா முதல் ஈச்வரர் வரையிலும் பிரணவம் முதலாக நான்காம் வேற்றுமையின் முடிவாகத் தத்தம் நாமபத மத்யத்தை யடைந்ததாக ஸ்வாஹா சப்தத்தின் முடிவாற் பலியினேற்பாடு சகலருக்கும் என்று சமர்ப்பிக்க வேண்டும். பலியோடு பூதபலியுமிடல்வேண்டும். சமஸ்த திக்குகளின் த்வாரங்களால் நிறைந்திருக்கிறதாயும் மூன்று இரண்டு ஒன்றென்னுந் திக்குகளினிடைவெளியில் இந்திரன் முதல் ஈசானர் வரையில் தமது ஸ்வய கர்மங்களில் பலி கொடுக்க வேண்டும்.

பிறகு கர்ப்பக் கிரகத்தை அடைந்து ஆசமனத்தைக் கொடுக்க வேண்டும். நிர்மால்யத்தை யெடுத்து சண்டேசருக்கு நிவேதனஞ் செய்யவேண்டும். எவை நிர்மலத்தை யடைகின்றனவோ அவை நிர்மால்யமென்று சொல்லப்படுகின்றன.

சண்டேசருக்கு ஆசமனத்தைக் கொடுக்க வேண்டும். சண்டேச நிர்மால்யத்தை விடவேண்டும். ஆழமான ஜலத்திலாவது அக்நியிலாவது பசுக்களுக்காவது நிவேதித்தல் வேண்டும்.

சரீரத்திற்கு மலபந்த மிருக்கிறபடியால் நிர்மால்யத்தை விஸர்ஜநம் செய்யவேண்டும். பிறகு அக்நி கார்யத்தைக் குண்டத்தின் சமஸ்கார பூர்வமாகச் செய்யவேண்டும்.

ஆருவது நைவேத்யவிதிபடல சந்த்ரிகை முற்றிற்று.

---:*:---

[illegible]

𑌉𑌦𑍀𑌚𑍍𑌯𑌾𑌂 𑌪𑍌𑌷𑍍𑌣𑌿𑌕𑍇 𑌕𑍁𑌣𑍍𑌡𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌶𑌤𑌾𑌰𑍍𑌧𑍇 𑌶𑌤𑌹𑍋𑌮𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁 ॥

𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑍇 𑌤𑍁 𑌹𑍋𑌮𑍇 𑌤𑍁 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌹𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑌂 𑌕𑍁𑌰𑍁 ।
𑌅𑌯𑍁𑌤𑌾𑌰𑍍𑌧𑍇 𑌤𑍁 𑌹𑍋𑌮𑍇 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌂 𑌷𑌟𑍍𑌕𑌰𑌮𑍍 ॥

𑌕𑍋𑌟𑌿𑌹𑍋𑌮𑍇𑌽𑌷𑍍𑌟𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌧𑍋𑌮𑍇 𑌤𑍁 𑌯𑍋𑌨𑌯𑌃 ।
𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌕𑍇𑌵𑌲𑌮𑍍 ॥

𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌶𑌤𑌕𑌂 𑌕𑍁𑌰𑍁 ।
𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌂 𑌵𑌾𑌥 𑌵𑌾 𑌕𑍋𑌣𑍇 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍇𑌨 𑌤𑍁 𑌭𑌾𑌜𑌿𑌤𑌃 ॥

𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌚 𑌕𑍁𑌣𑍍𑌡𑌂 𑌤𑍁 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌪𑌾𑌦𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌿𑌤𑍇 ।
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑌂 𑌅𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌤𑌦𑌂𑌶𑌕𑍇 । ௧௫

𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑍇𑌨 𑌤𑍁 𑌕𑍁𑌣𑍍𑌡𑌂 𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁 ।
[1]𑌅𑌷𑍍𑌟𑌾𑌷𑍍𑌟𑌕𑍇 𑌨𑌵𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥

𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌤𑍋 𑌯𑍋𑌨𑍍𑌯𑌾 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌕𑌣𑍍𑌠𑌾𑌦𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑍁𑌣𑍍𑌡𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

𑌷𑌡𑍍𑌭𑌾𑌗𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌤𑍋 𑌯𑍋𑌨𑍍𑌯𑌾 𑌪𑌦𑍍𑌮𑍇 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌷𑌡𑌶𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑍇 𑌽𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌤𑌃 ॥

𑌤𑌦𑍍𑌵𑌹𑌿𑌃𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌭𑌾𑌗𑍇𑌨 𑌕𑍇𑌸𑌰𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌤𑍀𑌯𑍇 𑌦𑌲𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌿 𑌤𑍁𑌰𑍀𑌯𑍇 𑌦𑌲𑌕𑌣𑍍𑌟𑌯𑌃 ॥

𑌪𑍍𑌰𑌭𑌾𑌗𑌾𑌦𑍍𑌵𑌤𑍁𑌷𑍍𑌕𑌣𑍍𑌠𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌲𑌾𑌗𑍍𑌰𑌂 𑌦𑌲𑍈𑌰𑍍𑌬𑌹𑌿𑌃 ।
𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌣𑍍𑌠𑌸𑌮𑍋𑌪𑍇𑌤𑌂 𑌦𑌲𑌾𑌵𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑌃 ॥ ௨௦

𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌪𑌰𑌾𑌕𑍃𑌤𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾 𑌮𑍇𑌖𑌲𑌾𑌂 𑌭𑌜𑍇𑌤𑍍 ।
𑌉𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌂 𑌤𑌥𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌅𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌦𑌲𑌂 𑌵𑍇𑌦𑌦𑌲𑌂 𑌅𑌷𑍍𑌟𑌦𑌲𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌾 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑌦𑌶𑌾𑌂𑌶𑌂 𑌭𑌾𑌗𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌦𑌤𑍍𑌤𑌤𑌃 ॥

𑌪𑌾 - 1 𑌅𑌷𑍍𑌟𑌦𑌿𑌕𑍍𑌷𑍁

𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑍇𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍋𑌣𑍇𑌨 𑌚𑌾𑌰𑍍𑌧𑌭𑌾𑌗𑌂 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌣𑌾𑌰𑍍𑌧𑌕𑍋𑌣𑍇𑌨 𑌤𑌦𑍍𑌭𑌾𑌗𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌮𑌾𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

𑌤𑌤𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑍍𑌪𑌾𑌤𑍇 𑌹𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑍇𑌨 𑌮𑍇𑌖𑌲𑌾𑌶𑍇𑌷𑌵𑌦𑍍𑌵𑌾 ॥

𑌕𑌰𑍍𑌣𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌹𑌸𑍍𑌤𑍋 𑌪𑌞𑍍𑌚𑌭𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌹𑌸𑍍𑌤𑌕𑌃 ।
𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑍇𑌖𑌲𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌤𑍋 𑌵𑌿𑌜𑌃 ॥ ௨௫

𑌪𑍀𑌠𑌿𑌕𑌾𑌸𑍍𑌯 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌮𑍇𑌖𑌲𑌾 𑌹𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌾 ।
𑌮𑍇𑌖𑌲𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑌯𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌕𑍁𑌰𑍁 ॥

𑌶𑌤𑌿𑌕𑌸𑍍𑌯 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌨𑍇𑌮𑌿𑌸𑍍𑌯𑌾𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌃 ।
𑌕𑌨𑍍𑌯𑍇 𑌨𑍇𑌮𑌿𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌨𑍇𑌮𑌿𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 ।
𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌮𑍇𑌖𑌲𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌕𑌾𑌰𑍍𑌤𑌯𑌾 ॥

𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌰𑍍𑌧𑌨𑍇𑌮𑌿𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 ।
𑌕𑌨𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃 𑌵𑍃𑌤𑌿𑌃 ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑍍𑌯 𑌨𑍇𑌮𑌿𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌷𑍍𑌟𑌕𑌾 ।
[1]𑌷𑌟𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃 ॥ ௩௦

𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌮𑍇𑌖𑌲𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾 𑌷𑌡𑍍𑌢𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌰𑌷𑍍𑌟𑌭𑌿𑌰𑍍𑌨𑍍𑌯𑌾 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃 ॥

𑌅𑌷𑍍𑌟𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾 𑌮𑍇𑌖𑌲𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 ।
𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾 𑌤𑍁 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌮𑍇𑌖𑌲𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌤𑌃 ।
𑌅𑌧𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑍇𑌮𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌮𑍇𑌖𑌲𑌾 𑌭𑌾𑌨𑌭𑌾𑌵𑌿𑌤𑍇 ।

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌭𑌾𑌗𑍇𑌨 𑌵𑌿𑌭𑌜𑍇𑌤𑍍 𑌕𑍁𑌣𑍍𑌡𑌭𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌤𑌦𑍇𑌕𑌭𑌾𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃

𑌪𑌾 - 1 𑌷𑌟𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃

[illegible] ௧௫

[illegible] ௨௦

[illegible]

இதி காமிகாக்யே மஹாதந்த்ரே க்ரியாபாதே
குண்டலக்ஷணவிதிர்நாம ஸப்தம: படல: ।

[illegible]

[illegible]

உ
சிவமயம்

7-வது குண்டலக்ஷணவிதிபடல சந்த்ரிகை.

குண்டலக்ஷணம்.

பிறகு அக்நி காரியத்தின் சித்திக்காக குண்டலக்ஷணமானது சொல்லப்படுகிறது. அக்நிக்கு ஸ்தானம் குண்டம், மேடை என இருவிதமாகச் சொல்லப்படுகிறது.

முதலில் நூலினுல் கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் முறையாக அளத்தல் வேண்டும்; பிறகு திக்குகளை யளந்தேற்படுத்தி விதிக்குகளை யுண்டாக்கி அஸ்த நிர்மாணமான விருத்த குண்டமாவது நான்கு மூலைக் குண்டமாவது செய்தல் வேண்டும்.

நித்திய நைமித்திக காம்யாதிகளில், சாத்திரப்படி செய்யக்கூடாத காலங்களில், சுட்டதேனும் சுடாததேனும் செங்கற்களால் மந்திர ஹோமங்கட்குத் தக்கபடி சாஸ்த்ரோக்தமான குண்டத்தை அமைக்க வேண்டும்.

வருண மந்திரங்கட்கு குடத்தினுருவம் போலவும், வாயுதேவதா மந்திரங்கட்கு த்வஜம் போலவும், மகேந்திர மந்திரங்கட்கு வஜ்ராயுதம் போலவும், அக்நிக்கு அதன்கோணமான ஏழுமூலை வடிவாகவும் உத்தமாசிரியர்களால் குண்டங்கள் சொல்லப்பட்டது.

உத்தம மத்திம வீர்யமுடைய தேவதைகட்கு நாற்கோண குண்டமும், அதம வீர்யமுள்ள தேவதைகட்கு முக்கோண குண்டமும் ஸ்த்ரீரூபமுள்ள தேவதைகட்கு யோனிவடிவமுள்ள குண்டமும், ருத்திரதேவதாம்சங்கட்கு அர்த்தசந்திரவடிவ குண்டமும், சாந்த தேவதைகட்கு வட்டமும், திரிமூர்த்திகட்கும் கின்னரர்கட்கும் ஐங்கோணம், வித்யேச்வரர்கட்குத் தாமரைப்பூ வடிவமான குண்டங்களும் இந்த குண்ட விதியில் சொல்லப்படுகிறது.

ஸ்தம்பனத்திற்கு நாற்கோணம் கிழக்கு திக்கிலும்; தாபநத்திற்கு யோநி குண்டம் ஆக்நேயதிக்கிலும், மாரணத்திற்கு அர்த்த சந்திர வடிவம் தெற்கிலும் பதினுறு கோணம் தென்மேற்கிலும், சாந்திக்கு வட்ட வடிவம் மேற்கிலும், உச்சாடணத்திற்கு ஆறுகோண குண்டம் வாயுமூலையிலும் சொல்லப்பட்டதாகும். புஷ்டிக்குப் பத்ம குண்டம் வடக்கு திக்கிலும், மோக்ஷத்திற்கு எண்கோணம் ஈசான்

பத்திலும். ஐம்பது ஹோமத்திலும் நூறு ஹோமத்திலும் அகலம் முறையே இரட்டிப்பாகும். ஆயிரம் பதினாயிரம் ஹோமங்களில் அகலம் முறையே ஒரு ஹஸ்தமும் இரண்டஸ்தமும், லக்ஷ ஹோமத்தில் நான்கு அல்லது ஆறு ஹஸ்தமும், கோடி ஹோமத்திற்கு எட்டு ஹஸ்த அகலமும் இருக்க வேண்டும். அதற்கு மேலாகவும் தாழ்வாகவும் இருக்கக்கூடாது.

யோனி குண்டம்.

குண்டமானது முழப்ரமாண மாகும். லிங்கத்திற்கு மிகவும் குறைந்த ஹஸ்தப்ரமாண குண்டம் போடவேண்டும். அவைகட்கு இரண்டங்குல வுயரமுதல் விருத்தி செய்து சமீபத்தில் முறையே இரண்டாவது மூன்ருவது பாகம் தள்ளி ஐந்தாவது அம்சத்தை முன்னே தள்ளி கோணத்தின் நான்காவது அம்சத்தைச் சுற்றுவதால் அரசிலைப்போன்ற ஆக்நேயதிக்குண்ட மேற்படும் எனச் சொல்லப்படுகிறது.

அர்த்தசந்த்ர குண்டம்.

நாற்கோணமானது பிரிக்கப்படுமளவில் முதலும் முடிவுமாகிய பாகத்தை விட்டு நடுவிலிருக்கும் ஏழுபாகத்தைச் சுற்றுவதால் அர்த்த சந்திரன் போற்குண்டம் சொல்லப்படுகிறது. பிறையைத் தெற்கில் வைத்து வடக்கில் நூல் போடவும்.

திரிகோண குண்டம்.

வடதிசையில் நூற்போடுவதை மூன்றிலொருபாகம் விருத்தி செய்து மூன்று குறிகள் செய்வதால் ராக்ஷசதிக் குண்டமாகும்.

விருத்த குண்டம்.

இவ்விடத்துக் குண்டமத்தியத்தினுன்கு பக்கத்தினுங் கண்ட சூத்திரத்தின் பாதியில் எட்டிலொரு பங்கைத் தள்ளி சுற்ற விருத்த குண்டமாகும் என்று சொல்லப்படுகிறது.

அறுகோண குண்டம்.

நாற்கோண க்ஷேத்திரங்கட்கு ஆறில் ஒருபங்காக விருத்தி செய்து நான்கு குறிகளால் ஆறுகோணம் ஆகும்.

பத்ம குண்டம்.

நாற்கோண க்ஷேத்திரமானது எட்டாகப்பகுக்கும் அளவில் இரண்டு பாகத்தாற் கர்ணிகையாகும். அதற்கு வெளியில் ஒரு பாகத்தால் சிறுவிதழ்களைச் செய்யவேண்டும். மூன்ருவது பாகத்தில் தள

மத்தியங்களும், நான்காவது பாகத்தில் இதழ் நுனிகளும் சுற்றுவதால் பத்ம குண்டம் ஆகும். இதழ் நுனியை வெளியிற் காண்பிக்க வேண்டும். அவ்வாறன்றி வேறு மற்றொரு விதமாக முன் விருத்த குண்டத்திற்குச் சமமான விருத்த குண்டத்தைச் செய்து நான்கு விதமாக மேகலையைப் பிரிக்க வேண்டும். அவ்வாறே உயரத்தையும் செய்து அரை அங்குலம் சேர்ந்த நாலங்குலத்தாற் கர்ணிகை ஆகும். மிகுதியை இதழாகச் செய்ய வேண்டும்.

எண்கோண குண்டம்.

நாற்கோண க்ஷேத்ரத்தில் பாதியிற் பத்திலொன்ருன பாகத்தை நான்கு திக்குகளிலும் அதற்கு வடக்கிலும் நியாசஞ் செய்ய வேண்டும். அந்த பிரமாணத்தாலே வேறு நான்கு கோணம் அடைவிக்க வேண்டும். அந்தச் சதுரச்ர க்ஷேத்திரத்தினுடைய சூத்திரத்தின் பிரமாணத்தால் அந்த கர்ண அளவாகிய அஸ்தங்களை அடையாளம் வைக்க வேண்டும். அவ்வடையாளம் எட்டுப் பிரிவாய் நூலினுல் அளப்பதால் எண்கோண குண்டமென்று சொல்லப்படுகிறது.

கண்டப்ரமாணம்.

அகலத்திற்குச் சரியாய் உள்ளாழம், மேகலையின் மிகுதியும் அவ்வளவினதே. கண்டப்ரமாணமானது யவப்ரமாணத்திலிருந்து முறையே விருத்தி செய்யப்பட்ட பெருவிரல் ப்ரமாணமும் முழ ப்ரமாணமும் இரண்டு முழப்ரமாணமும் ஆகும். இவ்வாறு கண்ட ப்ரமாணம் சொல்லப்பட்டது.

மேகலையளவு.

ஓ அந்தணர்களே! மேகலைப் பிரமாணத்தைக் கேளுங்கள். ஒரு பிடி பிரமாணமுள்ள குண்டத்திற்கு மேகலை இரண்டங்குலம் மற்ற இரண்டு மேகலையும் ஒரு அங்குலம் அரை அங்குலக் கிரமமாகச் செய்யத்தக்கது.

ஒரு பிடி குறைந்த ப்ரமாணமுள்ள குண்டத்திற்கு நேமியானது மூன்று அங்குல ப்ரமாணம். மற்ற இரண்டு மேகலையும் முறையே மூன்றங்குலத்திற் பாதியும் அதிற்பாதியும் கொள்ளத்தக்கது.

ஒரு ஹஸ்தப்ரமாணமுள்ள குண்டத்திற்கு நேமி நாலங்குலம். மற்ற இரண்டு நேமியும் மூன்றங்குலமும் இரண்டங்குலமுமாகக் கொள்ள வேண்டும்.

இரண்டஸ்த குண்டத்திற்கு முதல் நேமி ஆறங்குலம், இரண்டா நேமி நாலங்குலம், மூன்ரு நேமி மூன்றங்குலமாகும்.

நான்கு ஐந்து ஹஸ்த பிரமாணமுள்ள குண்டத்திற்கு முதல் நமி எட்டங்குலம், இரண்டாவது ஆறங்குலம், மூன்றுவது நான்கங் லம் ஆகும்.

ஆறு ஹஸ்த ப்ரமாணமுள்ள குண்டத்திற்கு முதல் மேகலை த்தங்குலம், இரண்டாவது எட்டங்குலம், மூன்றுவது ஆறங்குலம் சய்யத்தக்கது.

எட்டஸ்தப்ரமாணமுள்ள குண்டத்திற்கு முதல் மேகலை ன்னிரண்டங்குலம், இரண்டாவது பத்தங்குலம், மூன்றுவது எட்டங் லம் சாத்திர சம்மதமாகும்.

குண்டத்தின் உருவம் எங்ஙனமோ அங்ஙனமே மேகலைகளின் ருவமும். அவ்வாறன்றி வேறுவிதமாகவும் மேகலைகளினளவு சொல் ப்படுகிறது.

குண்டத்தினளவை இருபத்து நான்கு பாகமாக பிரித்து, அதனை ரண்டு மூன்று நான்கு பங்கு செய்து அந்த நான்கு பாகத்தில் ஒரு ாகம் ஏற்படுவது மாத்திர மாகும். அந்த ஒரு மேகலை ஆறங்குல ிஸ்தார உயரம் உண்டாகும். இவ்விடத்தில் மேகலைகள் அந்த ளவால் அகலம் உயரம் ஆகின்றன.

குண்ட நாபியினளவு.

குண்டத்தின் பிம்பத்தினுடைய பாதியளவினுலாவது மூன்றி லாரு பங்கினுலாவது நாபியானது சம்மதிக்கப்பட்டது. மேகலை ின் மத்யத்தை யடைந்திருக்கிற யோனியானது இரண்டு அங்குல ன்னதத்தோடு கூடியிருக்க வேண்டும். ஒரு பிடி, பிடிகுறைய ழம், முழம் இவைகளில் குண்டயோனி பிரமாணம் சொல்லப் ட்டது.

இரண்டு முழம் முதலான குண்டங்களுக்கு அகலத்தில் ரண்டு அங்குலம் அதிகமாக இருக்கவேண்டும். நிகளத்தினுல் ன்று அங்குல மதிகமாயும், தன்னுடைய புஜத்தினுல் அதைப் ார்க்கிலும் உயரமுமாகும். ஸமஸ்த குண்டங்களுக்கும் யோனி ான து அதனதன்பாதி அளவாக நிர்மிக்கப்பட்டது.

குண்டத்தின் கோமுகம்.

பிறகு அரசிலை போலாவது அவ்வாறன்றி யானையி னுதட்டிற் ச் சமமாகவாவது குண்டத்தினளவுடன் கூடின கோமுகம் இருக்க வண்டும். யோனி முதல் நாபிவரையில் நன்ருகப் பிரகாசிக்கப் ட்ட கோமுகத்தில் நாபி இருக்கவேண்டும். குண்டங்களின்

மத்யமோ வென்ருல் அதன் பாதியளவாக நிர்மிக்கப்பட்டது. அதில் நாலில் ஒரு பங்கு ப்ரமாணம் பத்மத்தி ஞகாரத்தை யுடையதாய் அது எவ்வண்ணமோ அவ்வண்ணமே ஆகும்.

மேடை குண்டங்களிருக்கவேண்டு மிடம்.

மண்டபத்தின் நடுவில் எண்பத்தொரு பதமுள்ள மேடை இருக்க வேண்டும். அதற்கு வெளியில் மூன்று பாகங்கள் செய்து நடுவில் குண்டங்களைச் செய்ய வேண்டும்.

வேதிகையை நான்கு பங்காகச் செய்து வேதிகையின் குண் டத்தினடுவில் எப்படியாகிலும் ஒரு அம்சத்தையாவது அல்லது குண்ட சமூகத்தையாவது செய்ய வேண்டும்.

பிரதான குண்டம் வாயுகுண்டம் சோமகுண்டம் ஈசானகுண்டம் இவைகளில் கிழக்கு முகமாகவாவது வடக்கு முகமாகவாவது இருக்க வேண்டும். மற்றது ஈசான முகமாகும்.

